# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

Calendar
Miscellaneous
Preliminary Register
**Sessions**

**Spl.Sessions Case No. : 15/2020**

**Deposition of witness for**
**Prosecution : P.W. : 1**
Defence : D.W. :
Court : C.W. :

**Name : விஜயகுமாரி** S/o.(or) W/o . :
Village : Taluk :
Caste : Calling :
Religion : Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of** 18.03.2020

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது சின்னவடவாடி விருதாச்சலத்தில் குடியிருந்து வருகிறேன். ஈரோடில் செங்கல் அரைக்கும் தொழில் செய்து வருகிறேன். எனக்கு 3 பெண் பிள்ளைகளும், 2 ஆண் பிள்ளைகளும் உள்ளனர். என் கணவர் ஆடு மேய்பதற்காக ரூபாய் 80,000/- ஆஜர் எதிரிகளிடம் கேட்டார். ஆஜர் எதிரி சங்கர் என் அண்ணன், ஆஜர் எதிரி பழனியம்மாள் என் அண்ணி. பணம் வாங்கிக் கொண்டு என் கணவர் 2 வாரம் தொழுதூரில் ஆடு மேய்த்தார். ஆடு மேய்க்க முடியாமல் பழனியம்மாளிடம் என் கணவர் போன் செய்து சொல்லிவிட்டு ஆடு மேய்காமல் இருந்துவிட்டார். நாங்கள் அரியலூர் மாவட்டம், நரசிங்கபாளையம் கிராமத்திற்கு நான் என் கணவரையும், குழந்தைகளையும் அழைத்து கொண்டு சென்றுவிட்டேன். நான் 1 வாரம் கழித்து பணம் தருவதாக சங்கரிடமும், பழனியம்மாளிடமும் போனில் சொன்னேன். ஆனால் சங்கர் அதற்கு ஒப்புக் கொள்ளாமல் பழனியம்மாள் காரில் நரசிங்கபாளையம் வந்து வித்யா, விஜயகுமார், விஜயசாந்தி ஆகியோர்களை குரும்பலூருக்கு அழைத்து சென்றுவிட்டார். நான் ஈரோடு போய் பணம் வாங்கி வந்து தொழுதூருக்கு நடுவில் பழனியம்மாளையும், சங்கரையும் வரவழைத்து எங்கள் ஊர் சேகர் மூலமாக ரூபாய் 45,000/- கொடுத்தேன். அவர்களும் எங்களிடம் என் பிள்ளைகளை ஒப்படைத்தார்கள். நாங்கள் அவர்களை

அழைத்துக் கொண்டு சின்னவடவாடிக்கு போய்விட்டு, மறுநாள் மாலை ஈரோடுக்கு சென்றுவிட்டோம். அங்கு பேருந்து நிறுத்தத்தில் என் மகள்ப ாதிக்கப்பட்ட பெண் சிறுநீர் கழிக்க வேண்டும் என்று கூறினார். அங்கு கழிப்பிடத்திலேயே என் மகள் மயக்கம் போட்டு விழுந்து விட்டார். நான் என்னவென்று கேட்டதற்கு சங்கர் பாதிக்கப்பட்ட சிறுமியிடம் உன் அம்மா உன்னை அழைத்து செல்ல வருகிறார் நீ போய் குளி என்று சொல்லியுள்ளார். குளித்துவிட்ட பிறகு உடை மாற்றுவதற்காக பாதிக்கப்பட்ட சிறுமி மறைவில் நின்ற போது சங்கர் உள்ளே சென்று மாற்றும் படி கூறியுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி மறைக்கவே வாயை பொத்தி குண்டுக்கட்டாக உள்ளே தூக்கிசென்றுள்ளார். உள்ளே சென்று என் மகள் பாதிக்கப்பட்ட சிறுமி கத்தியுடன் சங்கர் குஞ்சியை பாதிக்கப்பட்ட சிறுமியின் குஞ்சியுடன் வைத்துள்ளார். அதன் பிறகு என் மகளை என்னிடம் ஒப்படைத்துவிட்டார். என் மகளை அதன்பின்னர் நான் ஈரோடு அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நியைலத்தினர் அங்கு வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

Calendar
Miscellaneous
Preliminary Register
**Sessions**

**Spl.Sessions Case No. : 15/2020**

**Deposition of witness for**

| | | | |
|---|---|---|---|
| **Prosecution** | : | **P.W.** | : **2** |
| Defence | : | D.W. | : |
| Court | : | C.W. | : |

**Name** : **குமார்** S/o.(or) W/o . :
Village : Taluk :
Caste : Calling :
Religion : Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of** 18.03.2020

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது சின்னவடவாடி விருதாச்சலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஈரோட்டில் செங்கல் சூளையில் கல் அறுக்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 யை தெரியும். எனக்கு 3 பெண்கள், 2 பையன்கள். நான் ஆடு மேய்ப்பதற்காக எதிரிகளிடம் பணம் கேட்டபோது அவர்கள் தொழுதூரை சேர்ந்த முருகேசனிடம் ரூபாய் 80,000/- பெற்று தந்தார்கள். இரண்டு வாரம் ஆடு மேய்த்தேன். அந்த வேலை பிடிக்கவில்லை என்று வந்துவிட்டேன். வடவாடிக்கு சென்றுவிட்டேன். மீண்டும் வடவாடியிலிருந்து நரசிங்கபாளையம் என் மாமியார் வீட்டிற்கு வந்துவிட்டேன். என் மனைவியும், பிள்ளைகளும் மாமியார் வீட்டில் இருந்தார்கள். பழனியம்மாள் தான் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டார். நான் 1 வாரத்தில் தந்துவிடுவதாக கூறினேன். பணத்தை கொடுக்கும்வரையில் பிள்ளைகளை என்னிடம் ஒப்படைத்துவிடு என்று பழனியம்மாள் கூறினார். நான் அனுப்ப முடியாது என்று கூறினேன். பழனியம்மாள் வீட்டிற்கு வந்து வித்யா, விஜயகுமார், விஜயசாந்தி ஆகியோர்களை இழுத்து கொண்டு போனார். நான் ஈரோட்டிற்கு சென்று ரூபாய் 50,000/- பணம் பிரட்டிக் கொண்டு வந்தேன். நான் பழனியம்மாளுக்கு போன் செய்து பணத்தை எடுத்து வந்துவிட்டேன். பிள்ளைகளை ஒப்படைத்துவிடு என்று கூறினேன்.

மங்களூர் காவல் நிலையத்திற்கு வெளியே வைத்து ரூபாய் 35,000/- கொடுத்தோம். பழனியம்மாள் எனக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் 15,000/- த்தை கழித்து கொண்டேன். பிள்ளைகளை அழைத்து வரும்படி சொன்னேன். அவர்கள் ஒப்படைத்த பிறகு நாங்கள் வடவாடிக்கு சென்றுவிட்டோம். பிறகு ஈரோட்டிற்கு கிளம்பிவிட்டோம். பேருந்து நிறுத்தத்தில் என் மனைவியும், பாதிக்கப்பட்ட என் மகளும் சிறுநீர் கழிப்பதற்காக சென்றுள்ளார்கள். என் மனைவி என்னிடம் வந்து பாதிக்கப்பட்ட சிறுமி தனக்கு சிறுநீர் கழிக்கும் இடத்தில் வலிப்பதாக சொன்னதாக சொன்னார். நான் ஈரோட்டில் ஊத்துக்குளி மருத்துவமனையில் பாதிக்கப்பட்ட சிறுமியை காண்பித்தோம். பின்னர் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். வீட்டில் பாதிக்கப்பட்ட சிறுமி மயங்கி மயங்கி படுத்துக் கொண்டார். ஈரோடு அரசு மருத்துவமனையில் சேர்த்தபோது அங்கு மருத்துவர்கள் வழக்கு கொடுக்கும்படி சொல்லிவிட்டார்கள். அதனால் வழக்கு கொடுத்தோம். டிஸ்சார்ஜ் செய்யும்போது என் மனைவி என்னிடம் சங்கர் என் மகள் பாதிக்கப்பட்ட சிறுமியை கெடுத்துவிட்டதாக சொன்னார். போலிஸார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

Calendar
Miscellaneous
Preliminary Register
**Sessions**

**Spl.Sessions Case No. : 15/2020**

**Deposition of witness for**

| | | |
|---|---|---|
| **Prosecution** | : | **P.W. : 3** |
| Defence | : | D.W. : |
| Court | : | C.W. : |

**Name** : *செல்வராஜ்*
S/o.(or) W/o . :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of** 18.03.2020

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது குரும்பலூர் தோப்பு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். 26.10.2019ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நானும், செந்தில்குமாரும் எங்கள் வீட்டின் அருகில் பேசிக் கொண்டிருந்தபோது ஆய்வாளர் தோப்பிற்கு வந்து படம் வரைந்து எழுதினார்கள். எழுதிய பேப்பரில் கையொப்பம் கேட்டார்கள். நானும், செந்தில்குமாரும் கையொப்பம் இட்டோம். பார்வை மகசரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். பார்வை மகசர் அ.த.சா.ஆ.2 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.